**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

**O.S. No.124/2016**

2024 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 04-ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதிகூறப்படுகிறது.

**நாள் : 04.10.2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாந்தி | ஜாதி | : | |
| க/பெயர் | : | கண்ணன் | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதி வசந்தாவை எனக்கு தெரியும். அவர் எனது உறவினர் ஆவார். வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் நிலம் தொடர்பாக தாக்கல் செய்துள்ளார். எந்தெந்த புல எண்களில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியாக தெரியவில்லை. எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 5 மா 61 குழியாகும். தாவா சொத்து என்ன நிலம் என்றால் சாகுபடி நிலமாகும். தற்போது வரை சாகுபடி செய்து வருகிறோம். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபணம் வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள தமிழரசன் வாதியின் மகன் ஆவார்.

2. தாவா சொத்து ஆதியில் வசந்தாவிற்கு சொந்தமான சொத்தாகும். தாவா சொத்து தமிழரசன் பாக வீதமாக கிடைத்தது என்றும் நிரூபணம் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பாக வீதம் செய்யப்பட்டது என்பதற்குண்டான ஆவணங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் சொல்வதுபோல் அவ்வாறு எந்த ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவரின் பெயர் கண்ணன்.

3. கடந்த 2007-ல் வாதியின் மகன் தமிழரசன் தாவா சொத்தை எனக்கு விற்று விட்டார். கிரையம் செய்து கொடுத்தாரா என்றால் கொடுப்பதாக சொல்லி 1 லட்சம் ரூபாய் பெற்று கொண்டு மீதி 2,500/- தொகை கிரையம் செய்து கொடுக்கும் சமயத்தில்

கொடுப்பதாக சொல்லி எழுதிக்கொடுத்தார். வாதியின் மகன் தமிழரசன் என் கணவருக்கு எழுதிக்கொடுத்தார் என்பதற்குண்டான பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

(பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி வழங்கப்படுகிறது)

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.10.07 11:39:05 +0530

District Munsif
Mannargudi.